# PRIMARY SCHOOL
# SEMESTRAL ASSESSMENT 2 –
# TAMIL - PRIMARY
# PAPER 1

**Mark: 20**

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 60 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதவும் . படத்தின் அடியில் உதவிச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன . அவற்றைக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளவும் .




| | |
|---|---|
| வகுப்பறை | புதிய ஆசிரியர் |
| வியப்படைந்தனர் | உடல் நலமில்லை |
| மருத்துவமனை | குணமாக வேண்டும் |
| வாழ்த்து அட்டை | சிரிப்பு ஒலி |
| நண்பர்கள் | மகிழ்ச்சி |

# PRIMARY SCHOOL

## SEMESTRAL ASSESSMENT 2 - 2013

## TAMIL LANGUAGE

## PAPER 2

## PRIMARY 3

Name : ______________________ (    )

Class : Primary __________ Parents' Signature: ______________

28 October

50 Questions
50 marks

Total Time: 1 h 30 min

**INSTRUCTIONS TO CANDIDATES:**

Do not open the booklet until you are told to do so.

Follow all instructions carefully.

Answer all questions.

Total Number of printed pages- 10

| |
|---|
| / 50 |

## சொற்பொருள் (4 ம.)

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.

1. நான் என் பிறந்தநாளைக் கொண்டாட ஆவலுடன் காத்திருந்தேன்.

1) அன்புடன் 2) ஆசையுடன்
3) மகிழ்ச்சியுடன் 4) எதிர்ப்பார்ப்புடன் ( )

2. வேடன் விரித்த வலையில் முயல் ஒன்று **சிக்கிக்கொண்டது**.

1) மாட்டிக்கொண்டது 2) படுத்துக்கொண்டது
3) புகுந்துகொண்டது 4) மறைந்துகொண்டது ( )

3. என் அத்தை அடுக்குமாடி கட்டடத்தில் வசிக்கிறார்.

1) ஏறுகிறார் 2) குடியிருக்கிறார்
3) செல்கிறார் 4) நுழைகிறார் ( )

4. தாமரை படிக்கும்போது அவளுடைய தம்பி சத்தமாகக் கத்தி, அவளுக்குத் **தொல்லை** கொடுத்தான்.

1) துன்பம் 2) வருத்தம்
3) இன்பம் 4) விருப்பம் ( )

## வேற்றுமை உருபு (5 ம.)

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்குச் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.

5. நான் என் ____________ நீச்சல் குளத்திற்குச் சென்றேன்.

1) தம்பியின் 2) தம்பியுடன்
3) தம்பிக்கு 4) தம்பியுடைய ( )

6. பூனை தன் ____________ மீனைப் பங்கிட்டுக் கொண்டது.

1) குட்டிகளை 2) குட்டிகளிடம்
3) குட்டிகளில் 4) குட்டிகளோடு ( )

7. அம்மா ____________ நூலகத்துக்கு அழைத்துச் சென்றார்.

1) தங்கையை 2) தங்கையால்
3) தங்கைக்கு 4) தங்கையுடன் ( )

8. பாலன் எழுதிய ____________ முதல் பரிசு கிடைத்தது.

1) கவிதையின் 2) கவிதையுடன்
3) கவிதைக்கு 4) கவிதையுடைய ( )

9. என்னுடைய ____________ இருந்த கடிகாரத்தைக் காணவில்லை.

1) பைக்கு 2) பையை
3) பையில் 4) பையினுடைய ( )

செய்யுள் (4 ம.)

கீழ்க்காணும் செய்யுளை நிறைவு செய்வதற்கு ஏற்ற சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.

10. வைகறை ______________ எழு.

1. படுத்து 2. துயில்
3. தூக்கம் 4. விழித்து ( )

11. ______________ ஒழியேல்.

1. ஓதுவது 2. படிப்பது
3. பாடுவது 4. சிரிப்பது ( )

12. ஔவியம் ______________.

1. விலக்கேல் 2. தேடேல்
3. பேசேல் 4. கரவேல் ( )

13. நன்றி ______________.

1. சொல்லேல் 2. கேளேல்
3. விளம்பேல் 4. மறவேல் ( )

## தெரிவுவிடைக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியைக் கவனமாகப் படி.

கீழ்க்காணும் வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவுக்கும் ஏற்ற மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது. (5)

அன்று கனத்த மழை பெய்தது. கீதாவும் அவள் தோழியும் பள்ளி முடிந்து வீடு திரும்பினார்கள். இருவரும் குடையைப் பிடித்துக் கொண்டு சாலையில் நடக்க ஆரம்பித்தார்கள் சாலையைக் கடக்கும் போது சாலை ஓரத்தில் கூட்டமாக இருந்தது. கீதாவும் அவள் தோழியும் என்ன நடக்கிறது என்று பார்க்க விரைந்து ஓடினார்கள்.

அங்கு பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகி இருந்தது. சாலை எங்கும் கண்ணாடித் துண்டுகள் சிதறி கிடந்தன. பேருந்து ஓட்டுநருக்குத் தலையில் அடிப்பட்டு ரத்தம் கசிந்தது. அதைக் கண்ட கீதாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அந்தப் பேருந்து ஓட்டுநரின் காலிலும் அடிப்பட்டு இருந்தது. பேருந்து ஓட்டுநர் மயக்கமுற்ற நிலையில் இருந்தார். அதைப் பார்த்து கீதா கவலைப்பட்டாள்.

அவ்விடத்திற்கு மருத்துவமனை வண்டி ஒன்று விரைந்து வந்தது. அடிப்பட்ட ஓட்டுநருக்கு உடனடியாக சிகிச்சை அளித்து மருத்துவமனைக்குக் கொண்டு சென்றது. கீதா வீட்டுக்குச் சென்று அந்த விபத்தைப் பற்றி தம் பெற்றோரிடம் கூறினாள். அன்று இரவு முழுவதும் அவளுக்கு விபத்தைப் பற்றிய நினைப்பாகவே இருந்தது.

கீழ்க்காணும் வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவுக்கும் ஏற்ற மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது. (5)

14 ஏன் சாலை ஓரத்தில் கூட்டமாக இருந்தது ?

1) மழை பெய்ததால்
2) ஓட்டுநர் தலையில் இரத்தம் கசிந்ததால்
3) ஓட்டுநர் மயக்கமுற்ற நிலையில் இருந்ததால்
4) பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகி இருந்ததால்

( )

15. சாலையில் என்ன கிடந்தன?

1) ரத்தம்
2) தண்ணீர்
3) பேருந்து ஓட்டுநர்
4) கண்ணாடி துண்டுகள்

( )

16. கீதா எதைப் பார்த்துக் கவலைப்பட்டாள்?

1) ஓட்டுநர் மயக்க நிலையில் இருந்ததை
2) விபத்துக்குள்ளாகிய பேருந்தை
3) அடிப்பட்ட ஓட்டுநரை
4) அவளுக்கு என்ன செய்வது என்று தெரியாததால்

( )

17. ஓட்டுநர் எவ்வாறு மருத்துவமனைக்குச் சென்றார்?

1) கீதா அவரை மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றாள்.
2) கீதாவின் தோழி அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றாள்.
3) மருத்துவமனை வண்டி அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றது.
4) அவர் தானாக மருத்துவமனைக்குச் சென்றார். ( )

18. யாருக்கு விபத்துப் பற்றிய நினைவாக இருந்தது?

1) கீதாவின் பெற்றோருக்கு
2) கீதாவுக்கு
3) பேருந்து ஓட்டுநருக்கு
4) கீதாவின் தோழிக்கு ( )

## முன்னுணர்வுக் கருத்தறிதல் (5 ம.)

சரியான விடையின் எண்ணை அடைப்பினுள் எழுது.

ஒரு நாள் ஓர் ஆடு மேய்க்கும் சிறுவன் தன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான். அவன் தனியாக இருந்ததால் சற்று வேடிக்கை செய்து விளையாட முடிவு செய்தான். அவன் "ஓநாய்! ஓநாய்! உதவி! உதவி!" என்று உரக்க 19. __(   )__.

சுற்றி இருந்த விவசாயிகளின் 20. __(   )__ சிறுவனின் கூக்குரல் கேட்டது. தங்கள் வேலையை விட்டுவிட்டு, அவர்கள் சிறுவனை 21. __(   )__ விரைந்தனர். அங்கு அவர்கள் 22. __(   )__ ஓநாய் எதுவும் காணவில்லை. அவர்கள் சிறுவனிடம் "தம்பி, நீதானே, "ஓநாய்! ஓநாய்! உதவி! உதவி! என்று கத்தினாய்?" என்று கேட்டனர். அச்சிறுவன் சிரித்துவிட்டு, "வேடிக்கை செய்யவே இவ்வாறு கத்தினேன். இங்கு ஓநாய் எதுவும் வரவில்லை; நீங்கள் 23.__(   )__," என்றான். விவசாயிகள் கோபத்துடன் சிறுவனைத் திட்டிவிட்டுச் சென்றனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | வந்தபோது | 6. | காப்பாற்ற |
| 2. | இருந்தபோது | 7. | கண்களுக்கு |
| 3. | பாடினான் | 8. | போகலாம் |
| 4. | காதுகளுக்கு | 9. | கத்தினான் |

விளம்பரத்தைப் படி:

கண்ணைக் கவரும்
வண்ண மலர்கள்!
அழகான மலர்ச்செடிகள்!
இவை அனைத்தையும்
மலர் கண்காட்சி
2008ல் பார்க்க வாருங்கள்!





50 நாடுகளில் இருந்து :

- பலவகையான மலர்கள்
- கண்ணைப் பறிக்கும் வண்ணங்களில் ரோஜா பூக்கள்
- விதவிதமான மலர்ச்செடிகள் ......


கண்காட்சி
இடம்பெறும்

காலம் :
ஆகஸ்டு 4 முதல்
அக்டோபர் 12 வரை

நேரம் :
காலை 10 மணி முதல்
மாலை 4 மணி வரை

கட்டணம்:
பெரியவர்கள்: $5
மாணவர்கள்: $2

இந்தக்
கண்காட்சியைச்
செந்தோசா
நடத்துகிறது.



**மேற்கண்ட விளம்பரத்தில் இருந்து கேள்விகளுக்கு ஏற்ற விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக: (3 ம.)**

24. கண்காட்சியில் எவை இடம்பெற உள்ளன?

1. மலர்களும் செடிகளும்
2. மலர்களும் மரங்களும்
3. மலர்களும் பழங்களும் ( )

25. இந்தக் கண்காட்சியின் ஏற்பாட்டாளர் யார்?

1. பெரியவர்கள்
2. செந்தோசா
3. மாணவர்கள் ( )

26. கண்காட்சி எப்போது நடைபெறுகிறது?

1. ஆகஸ்டு 4 முதல் செப்டம்பர் 12 வரை
2. ஆகஸ்டு 4 முதல் அக்டோபர் 12 வரை
3. ஆகஸ்டு 4 முதல் நவம்பர் 12 வரை ( )

ஒலி வேறுபாடு (4 ம.)

சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுது.

27. ராமன் அதிக ____________ மிக்கவன்.

(பலம், பழம்)

28. ____________ வீட்டின் சுவரில் ஓடியது.

(பல்லி, பள்ளி)

29. மீன் குழம்பில் அம்மா ____________ சேர்த்தார்.

(புலி, புளி)

30. கிளியின் ____________ சிவப்பு நிறத்தில் இருந்தது.

(அலகு, அழகு)

மூவிடப்பெயர்(5 ம.)

கோடிட்ட இடங்களில் சரியான சொல்லைக் கொண்டு நிரப்பு.

31. மலர்விழி என்ன செய்கிறாள்?

____________________ என்ன செய்கின்றன?

32. அன்னங்கள் குளத்தில் நீந்தி மகிழ்ந்தன.

____________________ குளத்தில் நீந்தி மகிழ்ந்தேன்.

33. மாமா அழகாக வயலின் வாசிக்கிறார்.

____________________ அழகாக வயலின் வாசிக்கிறாய்.

34. சிறுவர்கள் பாட்டுப் போட்டியில் சிறப்பாகப் பாடினார்கள்.

____________________ பாட்டுப் போட்டியில் சிறப்பாகப் பாடினான்.

35. மான் துள்ளிக் குதித்து ஓடும்.

____________________ துள்ளிக் குதித்து ஓடுவார்கள்.

## சுயவிடைக் கருத்தறிதல் (10 ம.)

கீழ்க்காணும் பகுதியைக் கவனமாகப் படி. கீழே கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்குப் பதில் எழுது.

ஓர் இடையனிடம் ஏராளமான மாடுகள் கழுத்தில் மணியுடன் இருந்தன. ஒருநாள் மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தபோது ஒரு வழிப்போக்கன் வந்தான். அவன் இடையனிடம் விலைமதிப்புள்ள மாட்டின் கழுத்திலிருந்த மணியின் விலையைக் கேட்டான். இடையன், "விலை ஐந்து வெள்ளி," என்றான். வழிப்போக்கன், எட்டு வெள்ளியைக் கொடுத்து அந்த மணியை வாங்கினான். இடையன் எட்டு வெள்ளியை ஆச்சரியத்தோடு வாங்கிக் கொண்டு மணியைக் கழற்றிக் கொடுத்தான்.

அன்று இரவு மாடுகளைக் கட்டும்போது ஒரு மாடு குறைவதை அறிந்தான். அந்த விலைமதிப்புள்ள மாட்டைக் காணவில்லை. கழுத்தில் மணி இல்லாததால் மாடு காணாமல் போனதை இடையனும் அறியவில்லை. வழிப்போக்கன் தனியாக இருந்த மாட்டை ஓட்டிக் கொண்டு போய் விட்டதை அறிந்தபோது, தன் முட்டாள்த்தனத்தை எண்ணி வருந்தினான்.

36. இடையனிடம் எப்படிப்பட்ட மாடுகள் இருந்தன ?

37. வழிப்போக்கன் எதன் விலையைக் கேட்டான் ?

38. இடையன் ஏன் ஆச்சரியமடைந்தான் ?

39. எப்போது மாடு குறைவதை இடையன் அறிந்தான்

40. இடையன் என்ன நினைத்து வருந்தினான் ?

**P3**
**TESTPAPER 5**

நான் என் பிறந்த நாளைக் ...

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 2 | 2) 1 | 3) 2 | 4) 1 | 5) 2 |
| 6) 4 | 7) 1 | 8) 3 | 9) 3 | 10) 2 |
| 11) 1 | 12) 3 | 13) 4 | 14) 4 | 15) 4 |
| 16) 1 | 17) 3 | 18) 2 | 19) 9 | 20) 4 |
| 21) 6 | 22) 1 | 23) 8 | 24) 1 | 25) 2 |
| 26) 2 | 27) பலம் | 28) பல்லி | 29) புளி | 30) அல |
| 31) அவை | 32) நான் | 33) நீ | 34) அவன் | |

35) அவர்கள்

36) இடையனிடம் ஏராளமான மாடுகள் கழுத்தில் மணியுடன் இருந்தன.

37) வழிப்போக்கன் இடையனிடம் விலைமதிப்புள்ள மாட்டின் கழுத்திலுள்ள மணியின் விலையைக் கேட்டான்.

38) வழிப்போக்கன் ஐந்து வெள்ளிக்குப் பதிலாக எட்டு வெள்ளி கொடுத்து மணியை வாங்கியதால் இடையன் ஆச்சரியமடைந்தான்.

39) இரவு மாடுகளைக் கட்டும் போது தான் இடையன் மாடு குறைவதை அறிந்தான்.

40) இடையன் தன் முட்டாள்த்தனத்தை நினைத்து வருந்தினான்.